ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශේෂමානது

අංක 2112/13 - 2019 පෙබරවාරි මස 26 වැනි අඟහරුවාදා - 2019.02.26

*2112/13 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 26 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு**

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 43 (1) ஆம் உறுப்புரை மற்றும் 46(1)(அ) ஆகிய உறுப்புரைகளின் வண்ணம், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால் 2018, திசெம்பர் மாதம் 28 ஆந் திகதிய 2103/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு காலத்துக்குக்காலம் திருத்தப்பட்ட அறிவித்தலானது, 2019, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு மேலும் திருத்தப்படுகின்றது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மைத்திரிபால சிறிசேன,**
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2019, பெப்புருவரி 21.



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

(1) அவ்வறிவித்தலில் (இல.6) "நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் தலைப்பானது (இல.6) "நிதி அமைச்சர்" எனவும்;

(ஆ) அதன் நிரல் I இல் காட்டப்பட்டுள்ள 23 இலிருந்து 33 வரையுள்ள விடயங்களை நீக்குவதன்மூலம்;

(இ) அதன் நிரல் I இல் 22 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(ஈ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 40 இலிருந்து 49 வரையுள்ள விடயங்களை நீக்குவதன்மூலம்;

(உ) அதன் நிரல் II இல் 39 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(ஊ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள கீழ்வரும் விடயங்களை நீக்குவதன்மூலம்;

- அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டெட் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (1973ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க)
- இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சட்டம் (1966ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க)
- செய்தித்தாள்கள் கட்டளைச் சட்டம் (1839 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க)
- இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (1996ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க)
- இலங்கைப் பத்திரிகைப் பேரவைச் சட்டம் (1973ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க)
- இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனச் சட்டம் (1982ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க)
- தகவல் அறியும் உரிமைச் சட்டம் (2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க)

(2) அவ்வறிவித்தலில் (இல.15) "பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 17 மற்றும் 18 வரையுள்ள விடயங்களை நீக்குவதன்மூலம்;

(ஆ) அதன் நிரல் II இல் 16 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்;

(3) அவ்வறிவித்தலில் (இல.7) "அரச தொழில்முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் நிரல் II இல் காட்டப்பட்டுள்ள 4 ஆவது விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;

5. மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை

6. அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

(4) அவ்வறிவித்தலில் (இல.16) "கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடைவளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்" என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் நிரல் II இல் 24 மற்றும் 26 வரையுள்ள விடயங்களை நீக்குவதன்மூலம்;

(ஆ) அதன் நிரல் II இல் 23 ஆவது விடயத்திலிருந்து மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(இ) அதன் நிரல் III இல் காட்டப்பட்டுள்ள "(1982 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) கிராமோதய சபைச் சட்டம்" எனும் விடயத்தை நீக்குவதன்மூலம்;

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் உப உறுப்புரையின்வண்ணம், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால் 2018, திசெம்பர் மாதம் 28 ஆந் திகதிய 2103/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு, காலத்துக்குக்காலம் திருத்தப்பட்ட அறிவித்தலானது, 2019, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு, கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு மேலும் திருத்தப்படுகின்றது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மைத்திரிபால சிறிசேன,**
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2019, பெப்புருவரி 21.

### அட்டவணை

(1) அவ்வறிவித்தலில் (இல.4) "தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்" என்ற தலைப்பும் அதன் கீழுள்ள நிரல் I, II மற்றும் III இற்குப் பின்னர் பின்வரும் புதிய தலைப்பையும் நிரல் I, II மற்றும் III ஐச் சேர்ப்பதன் மூலம்;

**(5) விசேட பிரதேசங்கள் அபிவிருத்தி அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்**

| நிரல் I<br>கடமைகளும் பணிகளும் | நிரல் II<br>திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நிரல் III<br>நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
|---|---|---|
| 1. அமைச்சரவையினால் அடையாளம் காணப்பட்ட மலைநாட்டு விசேட பிரதேசங்களின் சமூக மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்குரிய கொள்கைகளைத் தயாரித்தலும் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதலும் | 1. கிராமிய புத்துயிரூட்டல் நிதியம் | • கிராமோதய சபைச் சட்டம் (1982 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) |
| 2. கல்வி அமைச்சரின் இணக்கத்தின்பேரில் விசேட பிரதேசங்களில் பாடசாலைக் கட்டிடங்களை நிறுவுதல் | 2. கிராமிய பொருளாதார புத்துயிரூட்டல் நிதியம் (நிதிசார்) | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின் கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |
| 3. நெடுஞ்சாலைகள் அமைச்சரின் இணக்கத்தின்பேரில் விசேட பிரதேசங்களில் பிரவேசப் பாதைகளை அபிவிருத்தி செய்தல் | 3. ஜனதிரிய நிதியம் (கிராமோதய சபை நிதியம்) | |
| 4. இந்து சமய அலுவல்கள் அமைச்சரின் இணக்கப்பாட்டின்பேரில் விசேட பிரதேசங்களில் இந்துக் கோவில்களை அபிவிருத்தி செய்தல் | | |
| 5. சுகாதார அமைச்சரின் இணக்கத்தின்பேரில் விசேட பிரதேசங்களில் சுகாதார மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதலும் கூட்டிணைத்தலும் | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**(5) விசேட பிரதேசங்கள் அபிவிருத்தி அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் **I*** | *நிரல் **II*** | *நிரல் **III*** |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |

6. மகளிர் விவகார அமைச்சரின் இணக்கப்பாட்டின்பேரில் விசேட பிரதேசங்களில் சிறுவர் பராமரிப்பு நிலையங்களைத் தாபித்தலும் கூட்டிணைத்தலும்

7. கிராமிய மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக நிதியுதவி வழங்குதல்

8. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள்

9. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல்

**(6) வெகுசன ஊடக அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்**

1. வெகுசன ஊடக விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்

2. மக்களது உளப்பாங்குகளை நல்வழியில் மையப்படுத்தி பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அரசியல் துறைகளின் முன்னேற்றக் கூறாக வெகுசன ஊடகத்தின் பங்களிப்பிற்குத் தேவையான திறமுறைகளை வகுத்தமைத்தல்

3. மக்களிடையே அறிவு, உளப்பாங்குகள் மற்றும் நல்ரசனை போன்றவற்றை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல்

4. சரியான தகவல்களை அறிந்துகொள்ளும் மக்களின் உரிமையை உறுதிப்படுத்தத் தேவையான வழிமுறைகளைக் கையாளுதல்

1. தகவல் திணைக்களம்
2. இலங்கை பத்திரிகைப் பேரவை
3. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
4. இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்
5. சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு
6. வரையறுக்கப்பட்ட இலங்கை ஐக்கிய செய்திப் பத்திரிகை கம்பனி
7. வரையறுக்கப்பட்ட லங்கா செய்திகள் நிறுவனம்
8. செலசினே ரூபவாஹினி நிறுவனம்
9. தகவல் அறியும் உரிமைகள் பற்றிய ஆணைக்குழு

- அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டெட் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (1973ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க)
- இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் சட்டம் (1966 ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க)
- செய்தித்தாள்கள் கட்டளைச் சட்டம் (1839 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க)
- இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (1996ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க)
- இலங்கைப் பத்திரிகைப் பேரவைச் சட்டம் (1973ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க)
- இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனச் சட்டம் (1982ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க)

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் **I*** | *நிரல் **II*** | *நிரல் **III*** |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |

5. உயர்தரத்திலான ஊடக ஒழுக்கத்தினை ஏற்படுத்தத் தேவையான நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துதல்

6. அரசாங்க உத்தியோகபூர்வ அறிவித்தல்கள் மற்றும் செய்திகளை வெளியிடுவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல்

7. இலங்கை பற்றிய தகவல்களை உள்நாட்டு, வெளிநாட்டு ஊடக நிறுவனங்களுக்கு வழங்குதல்

8. வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதராண்மைக் குழுக்களுக்கு அவசியமான தகவல்களையும் விளம்பரச் சேவைகளையும் வழங்குதல்

9. வெளியீடுகளுக்குரிய சர்வதேச ஒப்பந்தங்களையும் சமவாயங்களையும் நடைமுறைப்படுத்துதல்

10. செய்திகள், திரைப்படங்கள், விவரண நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவற்றைத் தயாரித்தலும் காட்சிப்படுத்துவதற்கு தகுந்த நடவடிக்கைகளை எடுத்தலும்

11. வாணிப தொலைக்காட்சி, வானொலி ஒலிபரப்புகள் மற்றும் வெளிநாட்டு அலைவரிசைகள் உட்பட வானொலி பிரசாரப் பணிகள்

12. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்கான நடவடிக்கைகளும்

13. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல்

- தகவல் அறியும் உரிமைச் சட்டம் (2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க)
- வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம், II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும்

3-517/2